**03.10.2013**

## தெரசா மகளிர் பல்கலைக்கழக மாணவிகளுக்கு வேளாண் திறன் பயிற்சி

கொடைக்கானல் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழக மாணவிகளுக்கு வேளாண் திறன் பயிற்சி முகாம் நடைபெற்றது. கொடைக்கானல் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழக கல்வியியல் துறையும், தொழில்முனைவோர் மையமும் இணைந்து, வேளாண் திறன் பயிற்சி முகாம் நடத்தின. முகாமுக்கு, பல்கலைக்கழக கல்வியியல் துறைத் தலைவர் ராஜேஸ்வரி தலைமை வகித்து, குறைந்த செலவில் வீட்டுக் காய்கறித் தோட்டம் அமைத்தல் பற்றிய திறன், வளர்ச்சிப் பயிற்சி குறித்து மாணவிகளிடம் பேசினார். வேளாண் துறையைச் சேர்ந்த சியாம் சுந்தர், சத்தியமாணிக்கம் ஆகியோர் வேம்பு மக்கு, வேம்பு கரைசல், முட்டை ரசம், தொழு உரம், மண்புழு உரம் தயாரித்தல் பற்றி விளக்கியதோடு, செய்முறைப் பயிற்சியும் அளித்தனர். ஒரு வாரம் நடைபெற்ற இப் பயிற்சி முகாமில், மாணவர்கள் தாமாகவே உரம் தயாரித்தல், நிலம் பண்படுத்துதல், விதைகள் நடுதல் குறித்த செய்முறைப் பயிற்சியில் ஈடுபட்டனர்.

## கீரணிப்பட்டியில் கால்நடை மருத்துவ முகாம்

காரைக்குடி அருகே கல்லல் ஒன்றியம் கீரணிப்பட்டி கிராமத்தில் குன்றக்குடி வேளாண் அறிவியல் நிலையம், கால்நடைத்துறை, வேளாண்மைத்துறை மற்றும் தோட்டக்கலைத்துறை ஆகியன சார்பில் வேளாண்மை மற்றும் கால்நடை மருத்துவ விழிப்புணர்வு முகாம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. துவக்க நிகழ்ச்சியில் குன்றக்குடி வேளாண் அறிவியல் நிலைய இணைப்பேராசிரியர் மற்றும் தலைவர் ம. பழனிச்சாமி தலைமைவகித்தார். கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குநர் கருணாகரன், வேளாண்மைத்துறை உதவி இயக்குநர் கணேசன் ஆகியோர் வாழ்த்திப் பேசினர். கீரணிப்பட்டி ஊராட்சித்தலைவர் தேவேந்திரன் சிறப்புரையாற்றினார். முகாமில் விவசாயிகள் சாகுபடி செய்துள்ள பயிரில் சேதத்தை ஏற்படுத்தக் கூடிய பூச்சிகள், நோய்கள், அதனைக்கட்டுப்படுத்தும் முறைகள், உரம் மற்றும் நுண்ணூட்ட மேலாண்மை முறைகள், வளர்ச்சி ஊக்கி தெளித்தல், களைக்கட்டுப்பாடு, சொட்டுநீர்ப் பாசன முறைகள், புதிய ரகங்கள் ஆகியவை குறித்தும் கறவை மாடுகள், கன்றுகள், ஆடுகள் மற்றும் கோழிகளுக்கு குடற்புழு நீக்கம், கால்நடைகளுக்கு நோய்களை

கட்டுப்படுத்தும் முறைகள், மீன் வளர்ப்பு, மதிப்பூட்டப்பட்ட பொருள்கள் தயாரித்தல் தொழில்நுட்பங்கள் குறித்தும் விளக்கமளிக்கப்பட்டது. மேலும் வேளாண் அறிவியல் மைய மூலம் வீட்டுக்காய்கறித்தோட்ட விதைகள், கால்நடை தீவனப்பயிர்கள், கால்நடைகளுக்குத்தேவையான தாது உப்புக்கலவை, தாது உப்புக்கட்டிகள், மண்புழு உரம், அசோலா மற்றும் மதிப்பூட்டப்பட்ட சிறுதானியப் பண்டங்களும் வழங்கப்பட்டன.

### பசுமை காய்கறிப் பண்ணை அங்காடி அமைக்க முடிவு

பெரியநாயக்கன்பாளையத்திலுள்ள காய்கறி கூட்டுறவு சங்கத்தின் சார்பில் பசுமை காய்கறிப் பண்ணை அங்காடி அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இச்சங்கத்தின் நிதிநிலையை மேம்படுத்த, துடியலூர் பகுதியில் இந்தப் பண்ணை அங்காடி அமைக்கப்பட உள்ளது. இதற்கென சங்கத்தின் தலைவர் வி.ரகுநாதன், செயலாளர் குப்புராஜ் மற்றும் கோவை மாவட்டக் கூட்டுறவு சங்க உயரதிகாரிகள், சென்னையில் செயல்பட்டு வரும் பசுமை காய்கறிப் பண்ணை அங்காடியின் செயல்பாடுகளை செவ்வாய்க்கிழமை பார்வையிட்டனர். காய்கறிகள் பாதுகாப்பு, வியாபார நுணுக்கங்கள் பற்றி அதிகாரிகளிடம் கேட்டறிந்தனர். இதுகுறித்து தலைவர் வி.ரகுநாதன் கூறுகையில், துடியலூரில் உள்ள டியூகாஸ் ஸ்தாபன வளாகத்தில் இந்த அங்காடி விரைவில் அமைக்கப்படும் என்றார்.

தினமலர்

நிறுவனர்: டி.வி.ராமசுப்பையர்

### வானூர் அருகே உப்பு தண்ணீர் பாய்ந்து பயிர்கள் கருகின: விவசாயிகள் கவலை

வானூர் அருகே உப்பு தண்ணீர் பாய்ந்து நெற் பயிர்கள் காய்ந்துள்ளதால் விவசாயிகள் கவலையில் ஆழ்ந்துள்ளனர்.

வானூர் ஒன்றியம் நாணக்கால்மேடு விவசாய பயன்பாட்டிற்கு 5 கிலோ மீட்டர் அளவில் ஏரி வரத்து ஓடை உள்ளது. திண்டிவனத்தில் இருந்து வரும் மழைநீர் முன்னூர் ஏரியில் நிரம்பி, வெளியேறும் உபரிநீர் காயல்மேடு, நாணக்கால்மேடு ஏரி வரத்து

ஓடை வழியாக சென்று கடலில் கலக்கிறது. ஓடையில் நிரம்பும் மழைநீரை தேக்கி வைத்துகொண்டு விவசாயம் செய்து வருகின்றனர்.

இந்த பகுதியில் (போர்வெல்) ஆழ்துளை கிணறு தோண்டினால் உப்பு தண்ணீர் கிடைத்து வருவதால் ஓடை தண்ணீரை கொண்டு பயிரிட்டு வருகின்றனர். நாணக்கால்மேடு, வங்காரம், கிளாப்பாக்கம், சிட்லப்பாக்கம், காயல்மேடு உள்ளிட்ட கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் ஓடையில் உள்ள தண்ணீரை இன்ஜின் மூலம் இறைத்து அங்கிருந்து பை லைன் கொண்டு நிலத்திற்கு பாய்ச்சி வருகின் றனர்.பருவமழை பெய்யும் என்ற நம்பிக்கையில் ஓடை தண்ணீரை பயன்படுத்தி, கடந்த 15 நாட்களுக்கு முன்பு 750 ஏக்கரில் நெற்பயிர் நடவு செய்தனர். இந்த பயிர்கள் அனைத்தும் காய்ந்து வருவதால் விவசாயிகள் அதிர்ச்சியடைந்தனர். இந்நிலையில் மரக்காணம் ஒன்றியத்தில் உள்ள வண்டிப்பாளையம், ஆத்திக்குப்பம், அனுமந்தை உள்ளிட்ட பகுதிகளில் உள்ள இறால் பண்ணைகளில் இருந்து வெளியேற்றப்பட்ட கெமிக்கல் கலந்த உப்புநீர் கழுவேளி நிலப்பகுதி வழியாக நாணக்கால்மேடு ஏரி வரத்து ஓடையில் கலந்தது தெரியவந்தது. நாணக்கால்மேட்டில் உப்புநீரால் பாதிக்கப்பட்ட பகுதிகளை ஜானகிராமன் எம். எல்.ஏ., ஒன்றிய சேர்மன் சிவா, மாவட்ட கவுன்சிலர் சக்ரபாணி ஆகியோர் பார்வையிட்டு விவசாயிகளுக்கு ஆறுதல் கூறினர்.

## கான்கிரீட் திட்டம் செயல்படுத்ததமிழக விவசாயிகள்சங்கம் தீர்மானம்

ஈரோடு: தமிழக விவசாயிகள் சங்கத்தின், ஈரோடு மாவட்ட ஆலோசனைக்கூட்டம், மாவட்டத்தலைவர் பெரியசாமி தலைமையில் நடந்தது.கீழ்பவானி வாய்காலில் பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டு, ஒரு மாதம் ஆன நிலையிலும், கடைமடை பகுதிக்கு தண்ணீர் கிடைக்கவில்லை. இதுவரை நடைமுறையில் இல்லாத அளவாக, 2,560 கனஅடி நீர் திறக்கப்பட்டும், சம அளவு நீர் மேலாண்மையை நடைமுறைப்படுத்த முடியவில்லை. பிரதான கால்வாய் கரையோரத்தில் உள்ளவர்களுக்கு மட்டுமே, முழு அளவு தண்ணீர் கிடைக்கிறது. இதனால், வாய்க்காலை நவீனப்படுத்தும் திட்டத்துக்கு எதிர்பார்ப்பு தெரிவிக்கின்றனர். எனவே, கீழ்பவானியில் கான்கிரீட் தளம் அமைக்கும் திட்டத்தை, அரசு அமல் செய்து, பாசன முறையை மாற்றி, தொடர்ந்து இரு முறை பாசனத்துக்கு, 10 மாத காலம் தண்ணீர் வழங்க வேண்டும். காலிங்கராயன் கால்வாயை நவீனப்படுத்தி, தோல், சாய கழிவுகள் கலக்காத வகையில் கான்கிரீட் திட்டத்தை செயல்படுத்த விரைவாக நடவடிக்கை

எடுக்க வேண்டும். சக்தி சர்க்கரை ஆலை நிர்வாகம், கரும்பு விவசாயிகள் நிலுவைத்தொகை, வங்கி கடன் முழுமையாக செலுத்த, மாவட்ட நிர்வாகம் முயற்சி மேற்கொள்ள வேண்டும், என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.மாவட்ட இளைஞரணி செயலாளர் ஈஸ்வரன், நிர்வாகிகள் எளையாக்கவுண்டர், திருமூர்த்தி, கொளந்தசாமிகவுண்டர், பழனிசாமி, ராஜமாணிக்கம், சக்தி உட்பட பலர் பங்கேற்றனர்.

## தமிழகம், கேரளாவில் முட்டைவிலை 336 காசுகளாக நிர்ணயம்

நாமக்கல்: தமிழகம், கேரளாவில் முட்டை விலை, 336 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக்குழு கூட்டம், நேற்று நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து பண்ணையாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து, 333 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, மூன்று காசு அதிகரித்து, 336 காசாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. தற்போது, நுகர்வு அதிகரித்து வருவதால், முட்டை விலையும் உயர்ந்துள்ளது.நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) நிலவரம்:சென்னை, 328, பெங்களூரு, 330, மைசூர், 330, ஹைதராபாத், 310, மும்பை, 344, விஜயவாடா, 317, கொல்கத்தா, 357, பர்வாலா, 311, டில்லி, 323.இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.நாமக்கல்லில், நேற்று நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், முட்டைக் கோழி விலை, 58 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், அதன் விலை, பத்து ரூபாய் குறைத்து, 45 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

## கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி முகாம்

தர்மபுரி: தர்மபுரி மாவட்டம், கிராமங்கள் மற்றும் மலைகிராமங்களை அதிகம் கொண்ட மாவட்டம். மாவட்டத்தில் விவசாயிகள் விவசாயத்துடன், ஒருங்கிணைந்த கால்நடை வளர்ப்பிலும் ஈடுபட்டு வருகின்றனர்.மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக, பரவி வரும் கோமாரி நோயால் மாடுகள் பாதிக்கப்பட்டு வந்தது. இதையடுத்து, மாவட்ட நிர்வாகம் மாவட்டம் முழுவதும் உள்ள, மூன்று லட்சத்து, 53 ஆயிரம் பசு, எருமை மாடுகளுக்கு கோமாரி தடுப்பூசி வழங்க உத்தரவிட்டது.

பென்னாகரம் தாலுகாவில் உள்ள மலைப்பகுதியில் உள்ள வட்டுவனஹள்ளி உள்ளிட்ட பல மலைக்கிராமங்களில், மாடுகளுக்கு தடுப்பூசி வழங்கப்படாததால், மாடுகள் கோமாரி நோயால் பாதிக்கப்பட்டன. இது குறித்து கலைக்கதிர் நாளிதழிலில் செய்தி வெளியானது.அதை தொடர்ந்து, நேற்று கால்நடைத்துறை சார்பில் வட்டுவனஹள்ளி, கோடுப்பட்டி, தாசம்பட்டி உள்ளிட்ட மலைக்கிராமங்களில் உள்ள மாடுகளுக்கு, கோமாரி தடுப்பூசி போடப்பட்டது.இது குறித்து கால்நடை அலுவலர் ஒருவர் கூறியது:

தர்மபுரி மாவட்டத்தில், மூன்று லட்சத்து, 53 ஆயிரம் பசு, எருமை மாடுகள் உள்ளன. இவற்றுக்கு மாவட்டம் முழுவதும் உள்ள, 60 மருத்துவமனைகள் மூலம் தேஜவான சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மாவட்ட நிர்வாக உத்தரவுப்படி, கால்நடைத்துறை உயர் அலுவலர்களின் அறிவுரைபடி, கடந்த, 15ம் தேதி கோமாரி நோய் தடுப்பூசி முகாம் துங்கப்பட்டது.இம்முகாம் வரும், 5ம் தேதி வரை நடக்கிறது. வட்டுவனஹள்ளி உள்ளிட்ட ஒரு சில பகுதிகளில் கோமாரி நோய் தடுப்பூசி போடப்படுவது, ஒரு சில காரணங்களாக விடுப்பட்டுள்ளது. இது குறித்து தகவல் தெரிந்ததை அடுத்து, உதவி இயக்குனர்கள் ஜெகநாதன், இளங்கோவன் தலைமையில், 10 குழுக்கள் வட்டுவனஹள்ளி உள்ளிட்ட மலைக்கிராமங்களுக்கு அனுப்பட்டது. அவர்கள், அப்பகுதியில் உள்ள, 2,500 மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போட்டுள்ளனர். விடுபட்ட அனைத்து பகுதிகளிலும் தடுப்பூசி வழங்க தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.மாவட்டத்தில், 60 கால்நடை மருதுவமனைகள் உள்ளன. மாடுகள் வைத்துள்ள விவசாயிகள், ஆறு மாதங்களுக்கு, ஒருமுறை மாடுகளுக்கு கோமாரி தடுப்பூசி போட்டு கொண்டு, மாடுகளை பாதுகாக்கலாம்.

## சவ்சவ் விலை சரிவு: விவசாயிகள் கண்ணீர்

தாண்டிக்குடி:போதிய மழையின்மை, நோய் தாக்குதல் காரணமாக விளைச்சல் பாதிக்கபட்ட சவ்சவ் விலையிலும் சரிவை கண்டுள்ளது. கீழ்மலை பகுதி முழுமையும் பந்தல் அமைத்து சசவ்சவ் விவசாயம் மேற்கொள்ளப்படுகிறது. காட்டு மாடு, பன்றிகளின் மேய்ச்சலால், இதன் விவசாய பரப்பு சுருங்கி விட்டது. இதையும் மீறி விவசாயம் செய்யும் விவசாயிகளுக்கு மழை பற்றாக்குறை, வைரஸ் நோய் தாக்குதல் காரணமாக மகசூல் இழப்பு ஏற்படுகிறது. பறிக்கப்படும் காய்கள் மதுரை, திண்டுக்கல், திருச்சி, வத்தலக்குண்டு பகுதிகளுக்கு அனுப்படுகிறது. கடந்த மாதம் அதிகபட்சமாக

ஒரு கிலோ ரூ.18 விற்ற நிலையில், சரிவடைந்து தற்போது கிலோ, ரூ. 10 க்கு விற்கப்படுகிறது. பராமரிப்பு செலவு விவசாயிகளுக்கு கட்டுபடியாகவில்லை என புலம்புகின்றனர்.

## முட்டை விலை 3 காசுகள் உயர்வு 333 காசுகளாக நிர்ணயம்



நாமக்கல்,

நாமக்கல் மண்டலத்தில் முட்டை கொள்முதல் விலை நேற்று முன்தினம் 330 காசுகளாக இருந்தது. இந்த நிலையில் நேற்று நாமக்கல்லில் நடந்த தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் முட்டையின் கொள்முதல் விலையை 3 காசுகள் உயர்த்த முடிவு செய்தனர். எனவே முட்டை கொள்முதல் விலை 333 காசுகளாக உயர்ந்து உள்ளது.

பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) வருமாறு:– சென்னை–328, ஐதராபாத்–310, விஜயவாடா, தனுகு–317, பார்வாலா–310, மும்பை–344, மைசூர்–330, பெங்களூர்–330, கொல்கத்தா–352, டெல்லி–323.

கறிக்கோழி கிலோ ரூ.55–க்கு விற்பனை செய்யப்பட்டு வந்தது. நேற்று பல்லடத்தில் நடந்த கறிக்கோழி ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் கிலோவுக்கு ரூ.10 குறைக்க முடிவு செய்தனர். எனவே கறிக்கோழி விலை கிலோ ரூ.45 ஆக குறைந்து உள்ளது. முட்டைக்கோழி கிலோ ரூ.58–க்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. அதன் விலையில் மாற்றம் செய்யப்படவில்லை.

தினகரன்

## கம்பு சாகுபடியில் கலக்கல் லாபம் விவசாயிகளுக்கு ஆலோசனை

திருச்சுழி: இரவை பருவத்தில் கம்பு பயிரிடுவது குறித்து வேளாண் துறை சார்பில் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து வேளாண் துறை அதிகாரிகள் கூறியிருப்பதாவது:

இரவை பருவத்தில் கம்பு பயிரிடுவதற்கு கோ7, கோ(சியு) 9, ஐசிஎம்வி221, ராஜ்171, எக்ஸ்7 ஆகியவை ஏற்ற ரகங்கள் ஆகும். எக்டேருக்கு 3.75 கிலோ விதை இடவேண்டும். எக்டேருக்கு 7.5 சென்டில் நாற்றாங்கால் அமைக்க வேண்டும். 3*1.5மீ அளவு கொண்ட 6 படுக்கைகளை ஒரு சென்டில் அமைத்து, அரை மீட்டர் கால்வாய், அரை அடி ஆழத்தில் ஒவ்வொரு படுக்கையை சுற்றிலும் அமைக்க வேண்டும். எக்டேருக்கு 750 கிலோ தொழு உரம் இடவேண்டும். தேன் ஒழுகல் நோய் பாதித்த விதைகளை நீக்க 10 லிட்டர் நீரில் ஒரு கிலோ உப்பினை கரைத்து, விதைகளை அதில் கொட்டவேண்டும். மிதக்கும் விதைகளை நீக்கி, நல்ல தண்ணீர் கொண்டு 3 அல்லது 4 முறை கழுவி நிழலில் உலர்த்த வேண்டும். தண்டு ஈ மற்றும் தண்டு துளைப்பான் நோய் பாதிப்பை தடுக்க, வேளாண் அதிகாரிகளுடன் ஆலோசித்து விதை முலாம் பூச வேண்டும்.

அடிச்சாம்பால் நோய் தாக்குதலில் இருந்து தப்பிக்க, மெட்டலாக்சில் 6 கிராமுடன், 5 மில்லி தண் ணீர் சேர்த்து, ஒரு கிலோ விதையுடன் கலக்க வேண்டும். 600 கிராம் அசோஸ்பைரில்லம் மற்றும் பாஸ் போ பேக்டீரியாவுடன் ஒரு எக்டேருக்கு உண்டான விதையை கலந்து உயிர் உரமாக விதைக்க வேண்டும். விரல்களால் ஒரு செமீ ஆழத்திற்கு கோடுகள் இட்டு, ஒரு படுகைக்கு அரை கிலோ விதையினை தூவி மண்ணில் மூடவேண்டும். மீதைல் பாரதி யான் மருந்தினை விதைத்தவுடன் எறும்புகளில் இருந்து பாதுகாக்கலாம். நாற்றுகளை தண்டு ஈ தாக்குதலில் இருந்து காப்பதற்கு, கார்போபியூரான் 3ஜி 600 கிராம் அல்லது போரேட் 10ஜி180 கிராம் தூவி இட வேண்டும். 30 செமீ கால்வாய் மூலம் நீர்ப்பாசனம் செய்ய வேண்டும்.

மண்ணில் நீர் உறிஞ்சிம் வரை மட்டுமே நீர்ப்பாய்ச்ச வேண்டும். வேளாண் அலுவலர்களின் அறிவுரைப்படி, 45*15 செமீ இடைவெளியில், 3 முதல் 5 செமீ ஆழத்தில் பார்களின் பக்கவாட்டில் வேர்களை 40 லிட்டர் நீரில் ஆயிரம் கிராம் அசோஸ்பைரில்லம் கலந்த கலவையில் 30 நிமிடம் நனைத்து அதன்பின் நட வேண்டும்.

சாதாரண ரகங்களுக்கும், வீரிய ஒட்டுரகங்களுக்கும் ஏற்ப அளவுகளில் உரமிட வேண்டும்.

இதுதொடர்பான கூடுதல் விபரங்களுக்கு அந்தந்த பகுதி வேளாண் அலுவலரையோ, வட்டார வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தையோ அணுகலாம் என வேளாண் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## கால்நடைகளுக்கு இன்சூரன்ஸ் எடுக்க வேண்டும் அமைச்சர் சுந்தரராஜ் பேச்சு

பரமக்குடி, : எதிர்பாராத அசம்பாவிதங்களை தடுக்க கால்நடைகளுக்கு கட்டாயம் இன்சூரன்ஸ் எடுக்க வேண்டும் என அமைச்சர் சுந்தரராஜ் பேசினார். பரமக்குடி அருகே போகலூரில் தமிழ்நாடு ஆடு வளர்ப்போர் உரிமையாளர் நலச்சங்கம் சார்பில் மாநில பொதுக்கூட்டம் நடந்தது. அமைச்சர் சுந்தரராஜ் தலை மை வகித்தார். சங்கத்தலைவர் செல்லச்சாமி முன்னிலை வகித்தார். மாநில பொதுசெயலாளர் முனியசாமி வரவேற்றார். மாவட்ட ஊராட்சி குழு தலைவர் சுந்தரபாண்டியன், போகலுர்ா் ஒன்றியக்குழு தலைவர் நாகநாதன், மாவட்ட கவுன்சிலர்கள் ஆணிமுத்து, சுரேஷ் உட்பட ஆடு வளர்ப்போர் சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் மாநில பொதுச்செயலாளர் லிங்கம் படத்தை திறந்து வைத்து அமைச்சர் சுந்ததராஜ் பேசுகையில், “ஆடு வளர்ப்போர் சங்கத்தினர் நலவாரியம் அமைக்கவும், ஆடுகள் வளர்க்க வனத்துறையின் அனுமதி கேட்டும் கோரிக்கை விடுத்துள்ளனர். இது தொடர்பாக சம்பந்தப்பட்ட துறை அமைச்சருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

ராமநாதபுரத்தில் மட்டும் ரூ.10 கோடியே 20 லட்சம் மதிப்புள்ள 8 ஆயிரத்து 940 இலவச ஆடுகள், ரூ.4 கோடி மதிப்புள்ள ஆயிரத்து 800 இலவச மாடுகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. எதிர்பாராத அசம்பாவிதங்களை தடுக்க கால்நடைகளுக்கு பயனாளிகள் கட்டாயம் இன்சூரன்ஸ் எடுக்க வேண்டும்“ என்றார்.